www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 039

20 செப்டம்பர் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# தேசிய ஊடகங்களையும், அமைப்புக்களையும் உடைக்கும் முயற்சியில் காகிதப்புலிகள்!

தமிழீழ தேசிய ஊடகங்களை உடைத்துக் கையகப்படுத்தும் முயற்சியில் காகிதப்புலிகளின் தலைவர் இராமு.சுபன் ஈடுபட்டு வருகின்றார்.

இது தொடர்பாக காகிதப்புலித் தொழிலதிபர் தனத்துடன் காகிதப்புலிகளின் தலைவர் இராமு.சுபன் தொலைபேசியில் உரையாடிய பொழுது எமது ஊடகப் புலனாய்வாளர்களால் ஒட்டுக் கேட்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஒலிப் பதிவு வடிவம் தற்பொழுது எமது ஆசிரியர் பீடத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. சிங்கள அரசின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கும் கே.பியின் வழிநடத்தலில் செயற்படும் காகிதப்புலிகள், கடந்த பதினைந்து மாதங்களாக தமிழீழ தேசிய ஊடகங்களையும், அமைப்புக்களையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான பகீரத பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் இதற்கு அடிபணிவதற்கு தேசிய ஊடகங்களும், அமைப்புக்களும் மறுப்பது காகிதப்புலிகளை திரிசங்கு நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது. தமது எசமான்களான சிங்கள-இந்திய அரசுகளின் நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற முடியாதிருப்பது, இராமு.சுபன், கே.பி.ரெஜி, வி(நாய்)யகம் போன்ற காகிதப்புலிகளுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்துகின்றது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக் கிழமை காகிதப்புலிகளின் தலைவர் இராமு.சுபனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட காகிதப்புலித் தொழிலதிபர் தனம், ஊடகங்களை உடனடியாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகின்றார்.

தமது முயற்சிகளுக்கு அனைத்துலக தொடர்பகம் இடையூறாக இருப்பதாகவும், இதற்கு விரைவில் முடிவு கட்ட வேண்டும் என்றும், இராமு.சுபனிடம் தனம் குறிப்பிடுகின்றார்.

இது விடயமாக எந்த நடவடிக்கையை சுபன் எடுத்தாலும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தான் தயாராக இருப்பதாகக் குறிப்பிடும் தனம், எந்தவொரு துறையை சேர்ந்த அமைப்புக்களும் தன்னிச்சையாக செயற்பட முடியாது என்றும், தமது கட்டுப்பாட்டிலேயே அவை இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கின்றார். தனத்தின் தேசியத் தலைவர் என்ற வகையில் அவரது கோரிக்கைகளுக்கு தலைவணங்கும் சுபன், இது தொடர்பாக இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு காகிதப்புலிகளின் கூட்டத்தை ஒழுங்குபடுத்தி முடிவெடுக்கப் போவதாகவும் உறுதியளிக்கின்றார். இத்துடன் உலகத் தமிழ் உறவுகளின் கவனத்திற்காக தனத்திற்கும், இராமு.சுபனிற்கும் இடையில் நடைபெற்ற தொலைபேசி உரையாடலின் ஒலிவடிவத்தை இணைத்துள்ளோம்.




# நிதி சேகரிப்பில் ஈடுபடுமாறு நரிகேசி உருத்திரகுமாரனிடம் கே.பி கட்டளை!

நாடுகடந்த அரசுக்கான நிதி என்ற போர்வையில் சிங்கள அரசுக்கான நிதியைத் திரட்டித் தருமாறு, நரிகேசி உருத்திரகுமாரனிடம் கே.பி கட்டளை பிறப்பித்திருப்பது தொடர்பான நம்பகமான தகவல்கள் கறுப்பிற்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

அண்மையில் நரிகேசி உருத்திரகுமாரனுடன் தொலைபேசியில் உரையாடிய கே.பி, இம்மாதம் 29ஆம் நாளுக்குப் பின்னர் இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கட்டளையிட்டதாக எமது ஊடகப் புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இது தொடர்பாக இலண்டனில் உள்ள தனது பாதுகாப்புச் செயலர் தயாபரன், அடிதடி அமைச்சர் சேகர் ஆகியோருடன் நரிகேசி உருத்திரகுமாரன் உரையாடியதாக தெரிய வருகின்றது.

இவை தொடர்பான ஆதாரபூர்வமான தகவல்கள் விரைவில் உலகத் தமிழ் உறவுகளிடம் கையளிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.



**“கறுப்பு – துரோகங்களின் கருவறுப்பு”**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரித்தானியாவில் ஈகைச்சுடர் திலீபனின் நினைவு நிகழ்விற்கு தனம் தடை!



பிரித்தானியாவில் வரும் 26ஆம் நாளன்று ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் நினைவு நிகழ்வை நடாத்துவதற்கு காகிதப்புலித் தொழிலதிபர் தனம் தடைவிதித்துள்ளார். ஆண்டுதோறும் ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் நினைவு நிகழ்வு பிரித்தானியாவில் இடம்பெறும் நிலையில், இம்முறை இதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தமிழீழ தேசிய செயற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொண்ட தனம், இதற்கு இடமளிக்க முடியாது என்று எச்சரித்துள்ளார்.


எனினும் தனத்தின் மிரட்டல்களுக்கு தேசிய செயற்பாட்டாளர்கள் அடிபணிய மறுத்ததை அடுத்து, தனது அடியாட்களை ஏவிவிட்டு, அவர்களை மிரட்டும் நடவடிக்கையில் தனம் ஈடுபடுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பாக தேசிய செயற்பாட்டாளர்கள் கலந்துரையாடிக் கொண்டிருந்த பொழுது, கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்த தனத்தின் அடியாட்கள், அங்கிருந்த தேசிய செயற்பாட்டாளர்கள் சிலரை அடித்து விரட்டியதோடு, ஏனைய செயற்பாட்டாளர்களை கடுமையாக மிரட்டியுமுள்ளனர்.

இதன்பொழுது தனத்தின் மிரட்டல்களுக்கு அடிபணிய மறுத்த தேசிய செயற்பாட்டாளர் ஒருவர் தொடர்பாக, தனத்தின் அடியாட்களில் ஒருவரான பாலன் என்பரால் அவதூறான செல்பேசிக் குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்) ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

இதனிடையே தனது உத்தரவை மீறி ஈகைச்சுடர் திலீபனின் நிகழ்வு இடம்பெறும் பட்சத்தில், விளையாட்டு விழாக்களுக்கு என வாடகைக்கு எடுக்கப்பட்ட கூடாரங்களுக்கான கட்டணமான 2500-00 பவுண்களை, கூடாரங்களின் உரிமையாளரான தேசிய செயற்பாட்டாளரிற்கு தான் வழங்கப் போவதில்லை என்று, தனம் மிரட்டல் விடுத்துள்ளார்.


அண்மையில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் அங்கிருந்த தேசிய செயற்பாட்டாளர்களை மிரட்டிப் பணத்தை தனத்தின் அடியாட்கள் எடுத்துச் சென்றிருந்தமை தொடர்பாக கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். இதனையடுத்து கூடாரத்தை அப்படியே கைவிட்டு தேசிய செயற்பாட்டாளர்கள் வெளியேறிய பொழுது எமது ஊடகப் புலனாய்வாளர்களால் பதிவு செய்யப்பட்ட நிழற்படத்தை, இத்துடன் உலகத் தமிழ் உறவுகளின் கவனத்திற்காக இணைத்துள்ளோம்.










கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்